## மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு - 2016

---

மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 10(ஈ)(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கட்டளையிடப்பட்டிருந்த போதும் பணம் செலுத்தப்படாத பெறுமதி ரூபா 4,082,996 தொகையான தளபாடம், கணனி துணைப்பாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆணைக்குழுவிற்கு கிடைத்திராத போதிலும், நிலையான சொத்துக்கள் மற்றும் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் இருப்பு பெறுமதி ரூபா 2,117,000 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 1,319,100 ஆகக் காணப்பட்டமையின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஆண்டின் இறுதியில் இருப்பு மீதி ரூபா 797,900 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் அச்சிடல் செலவினம் ரூபா 793,429 இனாலும் ஆண்டின் இறுதியில் அட்டுறு செலவினக் கணக்கின் மீதி ரூபா 2,253,277 இனாலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் அட்டுறு ஆராய்ச்சி செலவினக் கணக்கு ரூபா 562,960 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) ஊழியர் பணிக்கொடை ஒதுக்கீடு செய்யும் போது சேவைக்காலம் சரியாக கணிப்பீடு செய்யாமையினால் 21 ஊழியர்களுக்காக ரூபா 356,257 தொகை மேலதிகமாக ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஊ) கிரயம் சரியாக தீர்மானிக்கப்படாத 20 வகைகளுக்குரிய புத்தகங்கள் மற்றும் 11,218 வெளியீடுகளின் இருப்பு என்பவற்றை பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு கொள்கைகளின் பிரகாரம் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 15 நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்வு செய்யாமையின் காரணமாக வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 1,321,721 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் மீதியை, நிலையான சொத்துப் பதிவேட்டுடன் ஒப்பீடு செய்தபோது ரூபா 4,082,996 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பரிமாற்று ஒதுக்கக் (Translation Reserve) கணக்கின் மீதி ரூபா 229,124 ஆக இருந்த போதிலும், பேரேட்டின் பிரகாரம் அந்த மீதி ரூபா 1,146,753 ஆனமையால் நிதிக்கூற்றுக்களுக்கும் பேரேட்டுக்கும் இடையே ரூபா 917,629 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உரிய சான்றுகள் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| கடன்கொடுத்தோர் | 7,175,841 | பட்டோலை மற்றும் காலப்பகுப்பாய்வு |
| கடன்பட்டோர் | 304,695 | |
| செலுத்த வேண்டிய ஏனைய செலவினம் | 3,427,229 | |
| ஏனைய நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய பணம் | 2,988,766 | காலப்பகுப்பாய்வு |
| பதவியணியினர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய பணம் | 444,679 | |
| அட்டுறு செலவினம், முன்னைய ஆண்டு சீராக்கக் கணக்குகளின் மீதி போன்றவற்றுக்கான நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் | 14,241,296 | நாட்குறிப்புப் பதிவுகளை உறுதிப்படுத்தும் எழுத்துமூல சான்றுகள் மற்றும் விபரங்கள் |
| மொத்தம் | 28,582,506 | |

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின்போது நடைபெற்ற ‘‘உங்களது எதிர்காலத்தை நோக்கி’’ (Touch Your Future) நிகழ்ச்சித்திட்டத்திற்காக வரிசை அமைச்சிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய ரூபா 1,123,118 தொகை 2017 ஏப்ரல் 17 ஆந் திகதி வரையிலும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் கடன் மீதியில் 2006 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் சேவையிலிருந்து விலக்கிய இரண்டு ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 115,183 இனை அறவிடுவதற்கு நடப்பாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே குறிப்பிடப்படுகின்ற இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி அதிகாரச்சட்டத்தின் III ஆம் அத்தியாயம் | |
| (i) 14 (1) ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படாத மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி வழங்கலுக்காக எந்தவொரு நிறுவனத்தையும் தாபித்தல், முகாமைத்துவம் செய்தல், நடாத்திச் செல்லுதல் அல்லது நிர்வகித்தல் முடியாதிருந்த போதிலும், நாட்டில் நடாத்தப்படுகின்ற அவ்வாறான ஏனைய அனேக கல்வி நிறுவனங்கள் இந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பிரகாரம் ஒட்டுமொத்த பயிற்சி பாடநெறிகளையும் நடாத்திச் செல்லும் நிறுவனங்களின் எண்ணிக்கை 2,701 ஆக இருந்ததுடன் ஆணைக்குழுவில் பதிவுசெய்துள்ள கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை 1080 அதாவது 40 சதவீதம் மாத்திரமாக இருந்தது. 2017 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரையிலும் பதிவு செய்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை 692 வரை குறைவடைந்திருந்தது. |

(ii) 15 (1) ஆம் பிரிவு

பயிற்சி பாடநெறி நடாத்திச் செல்லுகின்ற நிறுவனங்களில் நடாத்தப்படுகின்ற மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கலிவிக்கான பாடநெறிகள் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட வேண்டியிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பிரகாரம் ஒட்டுமொத்தமாக 9768 பாடநெறிகளில் தேசிய திறன் தகைமை மட்டத்திற்காக பதிவு செய்யப்பட்டிருந்த பாடநெறிகளின் எண்ணிக்கை 2,442 ஆக இருந்ததுடன் அது 25 சதவீதம் மாத்திரமாக இருந்தது. 2017 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரையிலும் பதிவு செய்திருந்த பாடநெறிகளின் எண்ணிக்கை 1625 வரை குறைவடைந்திருந்தது.

சகல பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பாடநெறி பதிவு செய்யும் முறைமை என்பன நிறுவனத்தால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

(i) நிதிப்பிரமாணம் 188(2)

வங்கியில் வைப்புச்செய்யப்பட்ட போதும் குறித்த கால எல்லையில் தேறாதிருந்த ரூபா 51,155 பெறுமதியான 14 காசோலைகள் கணக்காய்வுத் திகதியான 2017 ஏப்ரல் 30 வரையில் 07 மாதங்கள் முதல் 17 மாதங்கள் வரையிலான காலம் கடந்திருந்த போதிலும் அது தொடர்பாக புலனாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 396

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விநியோகிக்கப்பட்டிருந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 6 மாதங்கள் முதல் 02 வருடங்களும் 05 மாதங்களும் வரையிலான காலத்தை கடந்திருந்த ரூபா 161,499 பெறுமதியான 44 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 15,982 பற்றாக்குறையாகாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,947,804 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டினது நிதி விளைவுகளில் ரூபா 1,931,822 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. ஆளனி வேதனம் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்கள் முறையே ரூபா 11,253,233 இனாலும், ரூபா 25,403,602 இனாலும் அதிகரித்திருந்த போதிலும் அரசாங்க மானியம், செயற்திட்ட மானியம் என்பன ரூபா 38,098,393 இனால் அதிகரித்தமை நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை மிகை காணப்பட்டபோதும், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. எனினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 41,489,597 தொகையான பங்களிப்பு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 39,198,869 வரை குறைவடைந்திருந்த போதிலும் மீண்டும் 2014 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக அதிகரிப்பு ஏற்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது அது ரூபா 71,844,533 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி முறைமையைத் திட்டமிடல், ஒருங்கிணைத்தல், அபிவிருத்தி செய்தல், தேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்களை வழங்குவதற்காக தேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டமொன்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் சகல மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சிக் கோட்பாட்டைப் பேணுதல் என்பன நிறுவனத்தை ஸ்தாபித்ததன் நோக்கமென குறிப்பிடப்பட்டிருந்தது. அந்நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரச்சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 11 (4) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச ரீதியில் திட்டங்களைத் தயாரிக்கும் தேவை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 யூன் 30 ஆந் திகதி வரையும் மேல் மாகாணத்திற்காக தொழில்சார் கல்வி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஏனைய மாகாணங்களுக்காக தயாரிக்கப்பட்டிருந்த திட்டத்தின் பிரகாரம், அந்த மாகாணங்களில் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான பின்தொடர் நடவடிக்கைகள், ஒருங்கிணைத்தல் அல்லது அபிவிருத்தி செய்தல் மற்றும் திட்டமிடல் என்பன ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் பத்திரத்தை வழங்குவதற்கான திட்டமொன்றாக தேசிய தொழிற்தகைமை சான்றிதழ் (NVQ) வழங்கும் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், ஆணைக்குழுவினால் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அத்திட்டம் மேற்பார்வை மற்றும் பரீட்சிப்பதற்காக போதியளவான பதவியணியினர் நிறுவனத்தில் இல்லாதிருக்கும் போது மதிப்பீட்டாளர்களை நியமித்தல் மற்றும் கொடுப்பனவு செய்யும் நடவடிக்கைகள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்டமையால் மதிப்பீட்டாளர்களை நியமித்தல், மதிப்பீடு செய்தல், மதிப்பீட்டாளருக்கு கொடுப்பனவு செய்தல் மற்றும் அந்த சான்றிதழ்களை விநியோகித்தல் போன்ற சகல நடவடிக்கைகளும் தாமதமாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) அதிகாரச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கட்டளை அல்லது விதிகள், பயிற்சி நிறுவனம் மற்றும் பயிற்றுவிப்பாளர்களால் பின்பற்றப்படுவதாக நிறுவன ரீதியான பரீட்சிப்பின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான பதவியணியினர் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்படாதிருந்த போதிலும், அதிகாரச்சட்டத்தின் 50 மற்றும் 51 ஆம் பிரிவுகளின் மூலம் அந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக இந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சியளித்தல் அதிகாரசபைக்கு பரீட்சகர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அவர்களை வருவித்தேனும் அந்த பரீட்சிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஈ) ஆணைக்குழுவின் கீழ் 400 அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள் புதிதாக பதிவுசெய்வதற்காக மதிப்பீடு செய்வதற்காகவும் 370 நிறுவனங்கள் பதிவினை புதுப்பிப்பதற்காகவும் மதிப்பீடு செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியாக முறையே 259 நிறுவனங்களும், 339 நிறுவனங்களும் மாத்திரமே மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.

(உ) செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அரசாங்க துறைகளில் 503 பாடநெறிகளும், தனியார் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் 108 பாடநெறிகளும் தேசிய பயிற்சி மட்டத்தின் பிரகாரம் தரப்படுத்தலுக்காக மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்த போதிலும், உரிய மாதிரிகளைப் பூர்த்தி செய்த 392 பாடநெறிகள் மாத்திரம் தரப்பட்டிருந்தது. தரங்களைப் புதுப்பிப்பதற்காக அரச துறை, தனியார் துறை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் 259 பாடநெறிகள் மாத்திரம் மதிப்பீடு செய்யப்பட்டு அதில் 177 பாடநெறிகளின் தரம் புதுப்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் இலக்கின் பிரகாரம் திறன் ஆணைக்குழுக்களில் தொழில் முயற்சித்திட்டத்தின் (Business Plan) பிரகாரம், அந்த ஆணைக்குழுவினால் ஆரம்ப ஆண்டிலிருந்து வருமானம் உழைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்காக திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 14,201,077 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(எ) திறன் பிரிவிற்காக அமுல்படுத்தப்பட்ட திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் இனங்காணப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 79 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆண்டின் போது அதில் ரூபா 34.25 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும், செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பாடசாலையை விட்டுச் செல்கின்றவர்களுக்கு தொழில்சார் கல்வியில் ஈடுபடுத்துவதற்கான கையேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் ஊழியச் சந்தையின் தகவல்களை நாளதுவரையாக்குவதற்காக ரூபா 8.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், உரிய பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாமையினால் அதில் 88 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(iii) செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த இலங்கையர்கள் வேலைவாய்ப்பை பெற்றுள்ள 10 வெளிநாட்டு நிறுவனங்களது அதிகாரிகளுடன் இணைந்து இலங்கையின் தேசிய தொழில்சார் தகைமை மட்டத்தை சர்வதேச நிலைமைக்கு ஒத்ததாக செய்வதற்கு உறுதிப்படுத்தப்படுதல், தொழில்சார் பயிற்சி பிரிவின் நடவடிக்கைகள் மற்றும் மாணவர்களின் செயற்பாடுகள் தொடர்பான கொள்கைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஆரம்ப அடிப்படை மதிப்பாய்வு (Baseline Survey) மற்றும் திறன் இடைவெளி மதிப்பாய்வு (Skill Gap Survey) என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பரிந்துரை மற்றும் முன்மொழிவுகளை வழங்குதல் என்ற பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iv) தொழில்சார் தொழில்நுட்ப துறைகளுக்காக பால் கொள்கையொன்றைத் தயாரித்தல் (Gender Policy) மற்றும் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வித் துறைகளின் பிரதிபிம்பங்களை மேம்படுத்துவதற்காக தொழில்சார் மேம்பாட்டு வேலைத்திட்டமொன்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் அமுல்படுத்துதல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அதிகாரச்சட்டத்தின் 37(ஆ) பிரிவின் பிரகாரம் திறன்களை அங்கீகரித்து தயாரிக்கும் பொறுப்பு தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சியளித்தல் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதனை செல்லுபடியாக்குதல் ஆணைக்குழுவினால் செய்ய வேண்டியுள்ளது. எனினும், 2016 ஆம் ஆண்டின் போது ஆணைக்குழுவினாலும் அங்கீகரிக்கப்பட்ட 14 புதிய திறக்னள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை அங்கீகரித்த திட்ட முறைமையின் பிரகாரம் கைத்தொழிலின் பங்களிப்பை பெற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) தேசிய தொழிற்தகைமை மட்டங்கள் (NVQ) 1 முதல் 7 வரை இனங்காணப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது தரப்படுத்தப்பட்ட சகல தொழில்சார் நிறுவனங்களுக்காகவும் கையளிக்கப்பட்ட உயர் சான்றிதழ் தேசிய தொழிற் தகைமையின் (NVQ) 6 ஆம் மட்டத்தில் சான்றுறுதிப்படுத்தப்பட்டமை செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. எனினும், அந்த மட்டத்திற்காக 06 சான்றிதழ் பத்திரங்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் தேசிய தொழிற்தகைமையின் 05 ஆம் மட்டத்திற்காக 87 சான்றிதழ்கள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் தேசிய தொழிற் தகைமைகளில் ஆகக்கூடிய மட்டங்களில் தகைமையுள்ளவர்களை உருவாக்கல் குறைந்த மட்டத்தில் பேணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஒ) அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில்சார் பயிற்சி பாடநெறிகளை தரப்படுத்தப்பட்ட மட்டத்தில் கொண்டு செல்லும் நோக்கில் தேவையான வசதிகளை வழங்குவதற்கு நிதியுதவிகளை வழங்கும் வேலைத்திட்டமொன்று ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக நிறுவனங்களைத் தெரிவு செய்வதற்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய மாதிரிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அரச துறையில் பயிற்சி நிலையம், நிதி உதவிகளை வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டின் போது தெரிவு செய்யப்படாதிருந்ததுடன் தனியார் துறையில் 03 நிலையங்களில் 04 பாடநெறிகளுக்கு ரூபா 856,835 நிதி உதவி வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தது. எனினும், தெரிவு செய்யும் செயற்பாடுகளின் தாமதத்தின் காரணமாக, 2016 ஆம் ஆண்டில் எந்த நிறுவனத்திற்கும் பணத்தை மீளளிப்புச் செய்ய முடியாதிருந்ததுடன் 2017 மார்ச் 30 வரையிலும் மீளளிப்புச் செய்யப்படாத பணம் ரூபா 336,910 ஆகும். மேலும், 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளில் ரூபா 3,565,280 தொகைகள் நிதி உதவி வழங்கப்பட்ட 20 நிலையங்களுக்குரிய பாடநெறிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், நோக்கமிடப்பட்ட பிரகாரம் தரப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்பயிற்சி நிறுவனங்களில் தேசிய தொழில்சார் தகைமைகளை வழங்கும் வகையில் திறன்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக மதிப்பீட்டாளர்களை நியமித்தல் மற்றும் அந்த மதிப்பீட்டிற்காக கொடுப்பனவு செய்தல், 2013 ஆம் ஆண்டு முதல் இந்த நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மதிப்பீட்டாளர்களின் தேவையினை சரியாக மதிப்பீடு செய்து கோரப்பட்ட பிரகாரம் போதியளவான நபர்களின் எண்ணிக்கையொன்றைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக மேலும் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ஆட்சேர்க்கப்பட்ட மொத்த மதிப்பீட்டாளர்களின் எண்ணிக்கை 2,165 ஆக இருந்த போதிலும், அம்மதிப்பீட்டாளர்கள் செயற்படு சேவையில் ஈடுபட்டிருக்கின்றமையை உறுதிப்படுத்துவதற்காக காலரீதியில் அந்த தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையில் தேசிய திறன் மட்டத்தில் வழங்குவதற்காக பரிசோதனைகளை நடாத்துவதற்கு தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சியளித்தல் அதிகாரசபையில் 42 பாடநெறிகளுக்காக மதிப்பீட்டாளர்களை நியமிப்பதற்காக கோரப்பட்டு 02 மாதங்கள் முதல் 13 மாதங்கள் வரையிலான காலம் கடந்திருந்த போதிலும் ஆணைக்குழுவினால் அந்நியமனம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2017 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையில் தேசிய திறன் மட்டத்தை வழங்குவதற்காக பரிசோதனைகளை நடாத்துவதற்கு மதிப்பீட்டாளர்கள் நியமிக்கப்பட்டு 03 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரை கடந்திருந்த போதிலும், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சியளித்தல் அதிகாரசபையின் மதிப்பீட்டு செயற்பாடுகள் 111 சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்படவில்லை.

(iv) தேவைகளை சரியாக இணங்காமல் நிதிஏற்பாடு வழங்கப்பட்டமையின் காரணமாக செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் மதிப்பீட்டாளருக்கு கொடுப்பனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 14.45 மில்லியன் ஆக இருந்த போதிலும், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் ரூபா 24.271 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஆணைக்குழுவின் கணக்கு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட திபஸ் கணனி கணக்கீட்டு முறைமை 2017 மே மாதம் முதல் செயற்படாதிருந்தமையால் உள்ளடக்கப்பட்டிருந்த தரவுகள் முழுமையாக அழிவடைந்திருந்தது. ஆணைக்குழுவினால் கணனியிலிருந்து வெளியே தரவுகளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு முறைமையும் பின்பற்றப்படாமையினால் அழிவடைந்திருந்த தரவு முறைமை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையும் முன்னைய நிலைக்கு கொண்டு வருவதற்கு முடியாதிருந்தது. மேலும், இது தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொண்டு தரவு முறைமை அழிவடைந்தமைக்கான காரணம் மற்றும் அதனுடன் தொடர்பான பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை கண்டறிவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தரவு முறைமை அழிவடைந்ததன் விளைவாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்வு நடவடிக்கைகளுக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடன்கொடுத்தோர் மற்றும் செலுத்த வேண்டிய செலவினங்களுக்குரிய பட்டோலைகளைச் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது.

**4.3 ஒப்பந்த நடைமுறைகள்**

அமைச்சிற்கு சொந்தமான கட்டிடத்தின் 8 ஆவது மாடி மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் பயன்பாட்டிற்காக தயாரிப்பதற்கு 2016 நவம்பர் 24 ஆந் திகதி, ஒரு மாத ஒப்பந்த காலத்தின் கீழ் ரூபா 6,575,375 பெறுமதியில் ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், மதிப்பீட்டில் அந்த மாடிக்குரிய தேவையான நீர், மலசலகூடம் போன்ற வசதிகளை வழங்குதல் உள்ளடக்கப்படாதிருந்தமையால் 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் அந்த மாடியை பயன்படுத்த முடியாதிருந்தது.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 116 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவியணியினர் 96 ஆனமையால் வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை 20 ஆகக் காணப்பட்டதுடன் அத்தியாவசிய பதவியான நிர்வாக உத்தியோகத்தர் பதவியும் அந்த வெற்றிடத்தில் காணப்பட்டது.

(ஆ) ஆட்சேர்ப்பு நடைமுறையின் 4.1.1 ஆம் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ சேவை மட்டத்தின் பதவிக்காக கோரப்பட்ட உள்ளக விண்ணப்பதாரர் கனிஷ்ட முகாமைத்துவ சேவை மட்டத்தின் 1 ஆம் தரத்தில் 05 வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு சேவை அனுபவம் பூர்த்தி செய்யாத உள்ளக உத்தியோகத்தர்களில் ஆறு பேர் உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். மேலும், மேலதிக தகைமைகள் மற்றும் அனுபவங்களுக்காக ஒவ்வவொரு நபருக்கும் தனிப்பட்ட புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தன.

## 4.5 நிதியத்தின் பயன்பாடு

பல்வேறு பணிகளுக்காக மூன்று செயற்திட்டங்களிலிருந்து கிடைத்து சேமிக்கப்பட்ட ரூபா 3,155,817 தொகையான வெளிநாட்டு உதவியில் பணத்தைப் பயன்படுத்துவதற்காக முறையான திட்டமொன்று இன்றி நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 05 ஆக இருந்த போதிலும், அதில் 02 உதவிப் பணிப்பாளர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதன் காரணமாக போதியளவான பிரகாரம் கணக்காய்வு நடவடிக்கைகளைச் செய்வதற்கு தடையாக இருந்தது. மேலும், திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்ட செலவினம் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும், உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 25 சதவீதம் முதல் 149 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

# 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வவ்போது ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | 2016 மே மாதத்தின் போது கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமை செயலிழந்திருந்ததுடன் முறையான பிரகாரம் தரவுகளை வெளியே களஞ்சியப்படுத்தாமையினால் (Back up) கணனி தரவுகள் அழிவடைந்தமை, தரவு முறைமை மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டுவரப்படாமை, தரவு முறைமை அழிவடைந்தமை தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு அதற்காக பொறுப்புவாய்ந்த தரப்பினர் இனங்காணப்படாமை. |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு | ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டம் மூலம் செயற்திட்ட பயிற்சி பிரிவில் தீர்மானிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக நிறுவனத்திற்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதனைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) மனித வள முகாமைத்துவம் | மதிப்பீட்டாளர்களின் தேவையினை மதிப்பீடு செய்தல், ஆட்சேர்த்தல் மற்றும் கொடுப்பனவுகளுக்காக போதியளவான முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் அறிமுகப்படுத்தப்படாமை. |
| (ஈ) உறுதிச்சீட்டுக்கள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு | கணக்காய்விற்காக உறுதிச்சீட்டுக்களை தயாரிக்கும் போது நிலுவை உறுதிச்சீட்டுடன் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரினால் பரீட்சிக்கப்படாமை, உறுதிச்சீட்டுக்களை பாதுகாப்பதற்காக முறையான நடவடிக்கை எடுக்காமை |